(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 138.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2026 மார்ச் 17, செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன,** சபாநாயகர்

**கௌரவ (டாக்டர்) ரிஸ்வி சாலி**, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ (திருமதி) ஹேமாலி வீரசேகர**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ கலாநிதி ஹரினி அமரசூரிய,** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ஏ.எச்.எம்.எச். அபயரத்ன,** பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) கிரிஷாந்த அபேசேன,** விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்

**கௌரவ அனுர கருணாதிலக்க,** துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்

**கௌரவ சுனில் குமார கமகே,** இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ ராமலிங்கம் சந்திரசேகர்,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர்

**கௌரவ குமார ஜயகொடி,** வலுசக்தி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) நலிந்த ஜயதிஸ்ஸ,** சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ (கலாநிதி) அனில் ஜயந்த,** தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி ஹர்ஷன நானாயக்கார,** நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) தம்மிக பட்டபெந்தி,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) உபாலி பன்னிலகே,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர்

**கௌரவ (திருமதி) சரோஜா சாவித்திரி போல்ராஜ்,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) சுசில் ரணசிங்ஹ,** வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

**கௌரவ பிமல் ரத்நாயக்க,** போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ கே.வி. சமந்த வித்யாரத்ன,** பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்

கௌரவ **வசந்த சமரசிங்க,** வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ **சுனில் ஹந்துன்னெத்தி,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ **விஜித ஹேரத்,** வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்

கௌரவ **சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

கௌரவ **சதுரங்க அபேசிங்ஹ,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர்

கௌரவ **(கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன,** வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

கௌரவ **அர்கம் இல்யாஸ்,** வலுசக்தி பிரதி அமைச்சர்

கௌரவ **நாமல் கருணாரத்ன,** கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **ஜனித ருவன் கொடித்துவக்கு,** துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர்

கௌரவ **ரத்ன கமகே,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **எரங்க குணசேகர,** நகர அபிவிருத்தி பிரதி அமைச்சர்

கௌரவ **ஆர்.எம். ஜயவர்தன,** வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு பிரதி அமைச்சர்

கௌரவ **நிசாந்த ஜயவீர,** பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர்

கௌரவ **மஹிந்த ஜயசிங்ஹ,** தொழில் பிரதி அமைச்சர்

கௌரவ **சுகத் திலகரத்ன,** விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர்

கௌரவ **கமகெதர திசாநாயக்க,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **வசந்த பியதிஸ்ஸ,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை பிரதி அமைச்சர்

கௌரவ **முனீர் முலாபர்,** சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **(பேராசிரியர்) ருவன் ரணசிங்க,** சுற்றுலா பிரதி அமைச்சர்

கௌரவ **சட்டத்தரணி சுனில் வடகல,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) ஹங்சக விஜேமுணி,** சுகாதார பிரதி அமைச்சர்

கௌரவ **எரங்க வீரரத்ன,** டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர்

கௌரவ **ரீ. பீ. சரத்,** வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் பிரதி அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) நாமல் சுதர்சன,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **அரவிந்த செனரத்,** காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர்

கௌரவ **பி. ருவன் செனரத்,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர்

கௌரவ **தினிந்து சமன் ஹென்னாயக்க,** இளைஞர் விவகாரங்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **அருண் ஹேமச்சந்திரா,** வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர்

கௌரவ **நலின் ஹேவகே,** தொழிற் கல்வி பிரதி அமைச்சர்

---

**கௌரவ ரொஷான் அக்மீமன**

கௌரவ அஜித் அகலகட

கௌரவ அமிர்தநாதன் அடைக்கலநாதன்

கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சாகரிகா அதாவுத

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி

கௌரவ சட்டத்தரணி யூ.பி. அபேவிக்ரம

கௌரவ (பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம

கௌரவ (டாக்டர்) நிஹால் அபேசிங்ஹ

கௌரவ (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ எம்.கே. எம். அஸ்லம்

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி

கௌரவ லக்ஸ்மன் நிபுண ஆரச்சி

கௌரவ பீ. ஆரியவங்ஷ

கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க

கௌரவ கே.இளங்குமரன்

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர்

கௌரவ உபுல் கித்சிறி

கௌரவ கதிரவேலு சண்முகம் குகதாசன்

கௌரவ வசந்த புஷ்ப குமார

கௌரவ சமிந்த லலித் குமார

கௌரவ சட்டத்தரணி சரத் குமார

கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி

கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்

கௌரவ மனோ கணேசன்

கௌரவ லசித் பாஷண கமகே

கௌரவ திலங்க யூ. கமகே

கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலூஷா லக்மாலி கமகே

கௌரவ அஜந்த கம்மெத்தெகே

கௌரவ சதுர கலப்பத்தி

கௌரவ நிஹால் கலப்பத்தி

கௌரவ அஜித் கிஹான்

கௌரவ (திருமதி) சமன்மலீ குணசிங்ஹ

கௌரவ அசோக குணசேன

கௌரவ டி.வீ. சானக

கௌரவ கயான் ஜனக

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ சட்டத்தரணி அநுராத ஜயரத்ன

கௌரவ திலித் ஜயவீர

கௌரவ (திருமதி) சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி

கௌரவ (திருமதி) சட்டத்தரணி அனுஸ்கா திலகரத்ன

கௌரவ சந்தன தென்னகோன்

கௌரவ சாமர சம்பத் தசனாயக

கௌரவ சுகத் வசந்த த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ தனுர திசாநாயக

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க

கௌரவ சுஜீவ திசாநாயக்க

கௌரவ சட்டத்தரணி சுசந்த தொடாவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ சுசந்த குமார நவரத்ன

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ அருண பனாகொட

கௌரவ நிமல் பலிஹேன

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து

கௌரவ ஸ்டெபனி பிரனாந்து

கௌரவ கந்தசாமி பிரபு

கௌரவ லால் பிரேமநாத்

கௌரவ நந்த பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ ரவீந்திர பண்டார

கௌரவ சுதத் பலகல்ல

கௌரவ (டாக்டர்) எஸ். ஸ்ரீ பவானந்தராஜா

கௌரவ ஈ.எம். பஸ்நாயக

கௌரவ விஜேசிரி பஸ்நாயக்க

கௌரவ சுனில் பியன்வில

கௌரவ (டாக்டர்) சந்தருவன் மதரசிங்ஹ

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ இம்ரான் மகரூப்

கௌரவ சானக மாதுகொட

கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல

கௌரவ தனுஷ்க ரங்கனாத்

கௌரவ சஞ்ஜீவ ரணசிங்ஹ

கௌரவ ஆர்.எம். சமந்த ரனசிங்ஹ

கௌரவ ஆர்.எம். காமினி ரத்நாயக்க

கௌரவ மஞ்சுல சுகத் ரத்னாயக

கௌரவ சுரங்க ரத்நாயக்க

கௌரவ (திருமதி) ஏ.எம்.எம்.எம். ரத்வத்தே

கௌரவ அசோக சபுமல் ரன்வல

கௌரவ துரைராசா ரவிகரன்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ ஹர்ஷன ராஜகருணா

கௌரவ சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ

கௌரவ மனோஜ் ராஜபக்ஷ்

கௌரவ சுனில் றாஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ.எஸ். இராதாகிருஷ்ணன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹசாரா லியனகே

கௌரவ எம்.எஸ் அப்துல் வாசித்

கௌரவ கஞ்சன வெலிப்பிட்டிய

கௌரவ சட்டத்தரணி பிரியந்த விஜேரத்ன

கௌரவ ருவன் விஜேவீர

கௌரவ தர்மப்ரிய விஜேசிங்ஹ

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ அசித நிரோஷண எகொட வித்தான

கௌரவ ஜகத் விதான

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ அதுல வெலதகொட

கௌரவ சிவஞானம் சிறீதரன்

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்**

**கௌரவ திலிண சமரகோன்**

**கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர**

**கௌரவ (டாக்டர்) இளையதம்பி சிறிநாத்**

**கௌரவ ஷாந்த பத்ம குமார சுபசிங்ஹ**

**கௌரவ தேவானந்த சுரவீர**

**கௌரவ சந்தன சூரியஆரச்சி**

**கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி.சூரியபண்டார**

**கௌரவ கிட்ணன் செல்வராஜ்**

**கௌரவ (டாக்டர்) ஜனக சேனாரத்ன**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி**

**கௌரவ சம்பிக ஹெட்டிஆரச்சி**

**கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி கீதா ஹேரத்**

**கௌரவ முஹம்மட் பைசல்**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. *சபாநாயகரின் அறிவித்தல்கள்:*** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—

“இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம், 2026 மாச்சு 06 ஆம் திகதி ‘நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தம்)’ மற்றும் ‘நீதித்துறை (திருத்தம்)’ எனும் பெயரிலான சட்டமூலங்களில் என்னால் சான்றுரை எழுதப்பட்டதென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.”

**2. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்—

(i) 2023 ஆம் ஆண்டுக்கான மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும்; மற்றும்

(ii) 2024 ஆம் ஆண்டுக்கான மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆண்டறிக்கையும் வருடாந்த கணக்கறிக்கையும்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கைகள் கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்—

(i) 2024 ஆம் ஆண்டுக்கான ஹோட்டல் டெவலப்பர்ஸ் லங்கா லிமிடெட்டின் வருடாந்த அறிக்கை; மற்றும்

(ii) 2024 ஆம் ஆண்டுக்கான இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் ஆண்டறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கைகள் பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்—

(i) (357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டத்தின் 29 ஆம் மற்றும் 155 ஆம் பிரிவுகளின் கீழ் பாதுகாப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2025 பெப்புருவரி 15 ஆம் திகதிய 2423/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(ii) (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின் 161 ஆம் பிரிவின் கீழ் பாதுகாப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2025 பெப்புருவரி 15 ஆம் திகதிய 2423/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்; மற்றும்

(iii) (359 ஆம் அத்தியாயமான) வான்படைச் சட்டத்தின் 29 ஆம் மற்றும் 155 ஆம் பிரிவுகளின் கீழ் பாதுகாப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2025 பெப்புருவரி 15 ஆம் திகதிய 2423/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ்வொழுங்குவிதிகள் பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர், 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரிவு 7(1)இ மற்றும் பகுதி VI என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் 105 ஆம் பிரிவின் கீழ் ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல் விதிகள் தொடர்பாக ஆளும் சபையின் தலைவரும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரால் ஆக்கப்பட்டு, 2026 சனவரி 30 ஆம் திகதிய 2473/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விதிகளைச் சமர்ப்பித்து, அவ்விதிகள் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்—

(i) 2021 ஆம் ஆண்டுக்கான மில்கோ (தனி) நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை;

(ii) 2022 ஆம் ஆண்டுக்கான தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் வருடாந்த அறிக்கை; மற்றும்

(iii) 2024 ஆம் ஆண்டுக்கான நில அளவைச் சபையின் வருடாந்த அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கைகள் சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்—

(i) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் கொழும்பு மாநகர சபை தொடர்பான விடயங்கள் பற்றி பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை; மற்றும்

(ii) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் சபரகமுவ மாகாண சபையின் கீழுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான விடயங்கள் பற்றி பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கைகள் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர், 2024 ஆம் ஆண்டுக்கான இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 34 ஆம் பிரிவின் கீழ் தடைசெய்யப்பட்ட பொருட்களின் பட்டியல் - 2026 தொடர்பாக இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 சனவரி 16 ஆம் திகதிய 2471/51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளைச் சமர்ப்பித்து, அவ்வொழுங்குவிதிகள் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட—

(i) 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 71 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள் (2025 டிசம்பர் 29 ஆம் திகதிய 2469/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது); மற்றும்

(ii) 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் வேதனம் மற்றும் சேவை நிபந்தனைகளை தீர்மானித்தல் (2026 மார்ச் 06 ஆம் திகதிய பாராளுமன்றத்தின் 3(8) ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது)

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) ஜாலம்பிட்டிய, கல்பொத்தயாய, இல. 108/1 ஏ யில் வதியும் திரு. திலக் இந்திக விதானகமவினது 2025.09.24 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ சமர்ப்பித்தார்.

(2) நாரம்மல, தெமடகஹவெல எனும் முகவரியில் வதியும் திரு. சி.எம்.எம்.ஆர். ஜயசிங்கவினது 2025.08.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அசோக குணசேன சமர்ப்பித்தார்.

(3) (i) கொழும்பு 13, ஹின்னி அப்புஹாமி மாவத்தை, இல. 90, 1/1 இல் வதியும் திருமதி ஜி. தெனிசரத்தினது 2025.08.22 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) யாழ்ப்பாணம், கரவெட்டி, துன்னலை வடக்கு எனும் முகவரியில் வதியும் திரு. கே. கதிரமலையினது 2025.09.19 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) மட்டக்களப்பு, ஆரயம்பதி, கணபதிபிள்ளை அதிபர் வீதி, முத்தாரம் எனும் முகவரியில் வதியும் திருமதி கணபதிபிள்ளை பாலகங்கேஷ்வரியினது 2025.08.26 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(iv) யாழ்ப்பாணம், சித்தன்கேணி, வட்டு – வடக்கு, பூம்பொலில் எனும் முகவரியில் வதியும் திரு. ரீ. கஜேந்திரனினது 2025.06.12 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. உண்ணாட்டரசிறை (திருத்தம்):** நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் சார்பாக பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

இச் சட்டமூலம் 2026 ஏப்ரல் 07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படும் என்றும் இச் சட்டமூலம் அச்சிடப்பட வேண்டுமெனவும் அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**6. சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு (திருத்தம்):** நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் சார்பாக பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

இச் சட்டமூலம் 2026 ஏப்ரல் 07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படும் என்றும் இச் சட்டமூலம் அச்சிடப்பட வேண்டுமெனவும் அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**7. மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) :** நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— தனியாட்கள் மற்றும் கம்பெனிகளின் மீட்பு, புனர்வாழ்வு, மற்றும் கடனிறுக்கவகையின்மை ஆகியவற்றுடன் தொடர்புடைய சட்டங்களைத் திருத்துவதற்கும், தொகுப்பதற்கும்; (97 ஆம் அத்தியாயமான) கடனிறுக்கவகையின்மை கட்டளைச் சட்டத்தினை நீக்குவதற்கும்; 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தினைத் திருத்துவதற்கும்; 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கும்; 1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, மத்தியஸ்த சபைகள் சட்டத்தைத் திருத்துவதற்கும் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

இச் சட்டமூலம் 2026 ஏப்ரல் 07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படும் என்றும் இச் சட்டமூலம் அச்சிடப்பட வேண்டுமெனவும் ஆளுகை , நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**8. ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் வேதனம் மற்றும் சேவை நிபந்தனைகளை தீர்மானித்தல்:** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— ஊழல் எதிர்ப்புச் சட்டம் இயற்றப்பட்டதன் மூலம், முன்னைய மூன்று சட்டங்கள், அதாவது; (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டம், 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டம் மற்றும் தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தற் சட்டம் என்பவற்றை நீக்குவதற்கும்; அதற்கு பதிலாக அந்த சட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த அனைத்து தவறுகளையும் உள்ளடக்கியதாகவும் அதனை அமுல்படுத்துவதற்கான அனைத்து அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு வழங்கும் வகையில் 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாலும்;

1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க சட்டத்தினால் உருவாக்கப்பட்ட இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களை விட கணிசமான அளவு பொறுப்புக்களை 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு வழங்கியுள்ளதாலும்;

அந்த அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்கான ‘இணைப்பு-I’ இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆளணியினர் தேவை என்று இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாதலாலும், ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்ட விஷேட செயல்பாடுகளைக் கருத்தில் கொண்டு, ஆணைக்குழுவிற்கு உதவும் அந்த ஆளணித் தொகுதிக்கு உயர் தகுதியும் அனுபவமும் வாய்ந்த அலுவலர்களை ஈர்ப்புடன் ஆட்சேர்ப்பு செய்து கொள்ளும் வகையிலான வேதனக் கட்டமைப்பை ஆணைக்குழு கொண்டிருப்பது அவசியமாதலாலும்;

2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரகாரம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அவசியமெனக் கருதும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் வேதனம் மற்றும் சேவை நிபந்தனைகளை பாராளுமன்றம் அங்கீகரிக்க வேண்டுமென சட்டத்தின் பிரிவு 26(2) கீழ் குறிப்பிடப்பட்டுள்ளமையினாலும்;

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரிவு 26(1) இன் கீழ் தீர்மானிக்கப்பட்ட ‘இணைப்பு-I’ இல் பட்டியலிடப்பட்டுள்ள அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் வேதனம் தொடர்பான முன்மொழிவிற்கு ‘இணைப்பு-II’ முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகம் அவர்களின் 2025.08.11 மற்றும் 2025.12.19 ஆகிய திகதிகளிடப்பட்ட கடிதங்களின் மூலம் நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதாலும், அம்முன்மொழிவு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரிவு 26(2) இன் பிரகாரம் உசிதமானதென தீர்மானிக்கப்பட்டுள்ளதாலும்;

மேற்படி வேதன முன்மொழிவின் கீழ், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் முழுமையாக அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்களின் ஊழியர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்குவதற்கான சுற்றுநிருபங்களின் விதிகளைப் பயன்படுத்துவதில், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு தொடர்புடைய சுற்றறிக்கைகளில் மேற்படி கொடுப்பனவுகளுக்கு உரிமையுள்ள அதிகாரிகளின் வகைகள்/பதவிகளை தீர்மானிக்க வேண்டுமாதலினாலும்;

ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரிவு 26 (2) இல் உள்ள சேவை நிபந்தனைகள், சட்டத்தின் பிரிவு 32 (1) இன் படி இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவால் ஆக்கப்படும் விதிகள் சட்டத்தின் பிரிவுகள் 32 (2) மற்றும் 157 (1) இன் படி குறித்த விதிகளை உருவாக்கும் அதிகாரங்கள் அந்த ஆணைக்குழுவிடம் இருத்தல் வேண்டுமென்பதாலும்; மற்றும்

1994 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க சட்டத்தால் உருவாக்கப்பட்ட ஆணைக்குழுவில் பதவி வகித்த மற்றும் 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஆணைக்குழுவில் இணைக்கப்படும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் (63 அலுவலர்களுக்கு அதிகரிக்காமல்), ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரிவு 163(2)(ஏ) பிரிவிற்கு ஏற்ப மற்றும் அங்கு குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படையில் புதிய ஆணைக்குழுவில் ஓய்வூதியத்துடன் கூடிய வேதனத்துடன் பொருத்தமான பதவியில் (ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரிவு 26(1) இன் கீழ் அங்கீகரிக்கப்பட்டது) மற்றும் பொருத்தமான வேதன நியதிகளுடன் உரிய சம்பளத் திட்டத்தில் பொருத்தமான பதவிக்கு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

இதன் பிரகாரம், 2023 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரிவு 26 (2) இன் பிரகாரம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் வேதனம் மற்றும் சேவை நிபந்தனைகளை தீர்மானித்தல் இப் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படுமாக.

**இணைப்பு - I**

**2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரிவு 26 (1) இன் பிரகாரம் அதன் செயல்பாடுகளை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு தேவையானதென ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் ஆளணியினர்**

| | பதவிப்பெயர் | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மேலதிக பணிப்பாளர் நாயகம் | 01 |
| 2 | சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் நாயகம் | 01 |
| 3 | சிரேஷ்ட பணிப்பாளர் | 02 |
| 4 | பிரதிப் பணிப்பாளர் நாயகம் | 06 |
| 5 | பணிப்பாளர் | 09 |
| 6 | பிரதம உள்ளக கணக்காய்வாளர் | 01 |
| 7 | சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் நாயகம் | 16 |
| 8 | உதவிப் பணிப்பாளர் நாயகம் | 58 |
| 9 | உதவிப் பணிப்பாளர் / பிரதிப்பணிப்பாளர் | 45 |
| 10 | உள்ளக கணக்காய்வாளர் | 01 |
| 11 | ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 03 |
| 12 | நிர்வாக உத்தியோகத்தர் | 04 |
| 13 | போக்குவரத்து அலுவலர் | 01 |
| 14 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01 |
| 15 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப | 04 |
| 16 | சிரேஷ்ட புலனாய்வு உத்தியோகத்தர் | 47 |
| 17 | சிரேஷ்ட ஊழல் தடுப்பு உத்தியோகத்தர் | 12 |
| 18 | புலனாய்வு உத்தியோகத்தர் | 337 |
| 19 | ஊழல் தடுப்பு உத்தியோகத்தர் | 50 |
| 20 | நூலகர் | 01 |
| 21 | மொழி பெயர்ப்பாளர் மற்றும் உரைபெயர்ப்பாளர் | 06 |
| 22 | உதவி சட்ட அலுவலர் | 07 |
| 23 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | 06 |
| 24 | உதவி நூலகர் | 01 |
| 25 | ஊழல் எதிர்ப்பு முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ** | 113 |
| 26 | தட்டெழுத்தாளர் மற்றும் சுருக்கெழுத்தாளர் | 45 |
| 27 | தொடர்பாடல் உதவியாளர் | 07 |
| 28 | சாரதி | 69 |
| 29 | அலுவலக உதவியாளர் | 117 |
| | **மொத்தம்** | **971** |

** ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரிவு 26(1) இன் படி ஆணைக்குழு ஆட்சேர்ப்பு செய்ய தீர்மானித்துள்ள பதவி "ஊழல் தடுப்பு முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்" ஆகும். நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் தெரிவிக்கப்பட்ட பதவியின் பெயர் "முகாமைத்துவ உதவியாளர்" பதவியாகும். பதவிகளின் பெயர்கள் வேறுபட்டாலும் ஒதுக்கப்பட்ட கடமைகள் ஒத்த தன்மை கொண்டவை என்பதாலும், பல காரணிகளைக் கருத்தில் கொண்டும், ஆணைக்குழு "ஊழல் எதிர்ப்பு முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்" என்ற பதவியின் பெயரைப் பயன்படுத்த முடிவு செய்துள்ளது.

இணைப்பு - II

ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரிவு 26 (2) இன் பிரகாரம் நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒப்புதலுடன் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டு, அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட வேதன முன்மொழிவு.

01. முன்மொழியப்பட்ட சம்பள திட்டம்

| | பதவி | சம்பளக் குறியீடு | ஆரம்ப கட்டம் | ஆண்டுகள் | 1ஆம் கட்டம் | ஆண்டுகள் | 2ஆம் கட்டம் | ஆண்டுகள் | 3ஆம் கட்டம் | ஆண்டுகள் | 4ஆம் கட்டம் | உச்சபட்சம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மேலதிக பணிப்பாளர் நாயகம் | AC-E 4 - 2025 | 212,000 | 10 | 4,950 | | | | | | | 261,500 |
| 2 | சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் நாயகம் / சிரேஷ்ட பணிப்பாளர் | AC-E 3 - 2025 | 194,000 | 10 | 4,500 | | | | | | | 239,000 |
| 3 | பிரதிப் பணிப்பாளர் நாயகம்/ பணிப்பாளர்/ பிரதம உள்ளக கணக்காய்வாளர் | AC-E 2 - 2025 | 176,000 | 10 | 4,250 | | | | | | | 218,500 |
| 4 | சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் நாயகம் | AC-E 1-2 - 2025 | 151,900 | 10 | 3,900 | | | | | | | 190,900 |
| 5 | உதவிப் பணிப்பாளர் நாயகம் | AC-E 1-1 - 2025 | 131,300 | 10 | 2,940 | | | | | | | 160,700 |
| 6 | பிரதிப்பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் / உள்ளக கணக்காய்வாளர் / ஆராய்ச்சி அலுவலர் | AC-E 1 - 2025 | 131,300 | 10 | 2,940 | 10 | 3,595 | | | | | 196,650 |
| 7 | நிர்வாக உத்தியோகத்தர் | AC-JM 1-2 - 2025 | 74,010 | 10 | 1,360 | 18 | 2,040 | | | | | 124,330 |
| 8 | போக்குவரத்து அலுவலர் | AC-JM 1-2 - 2025 | 74,010 | 10 | 1,360 | 18 | 2,040 | | | | | 124,330 |
| 9 | தொழில்நுட்ப அலுவலர் | AC-JM 1-2 - 2025 | 74,010 | 10 | 1,360 | 18 | 2,040 | | | | | 124,330 |
| 10 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அலுவலர் | AC-JM 1-2 - 2025 | 74,010 | 10 | 1,360 | 18 | 2,040 | | | | | 124,330 |
| 11 | சிரேஷ்ட புலனாய்வு உத்தியோகத்தர் | AC-MA 5-3 - 2025 | 79,440 | 10 | 2,040 | 20 | 2,230 | | | | | 144,440 |
| 12 | சிரேஷ்ட ஊழல் தடுப்பு உத்தியோகத்தர் | AC-MA 5-3 - 2025 | 79,440 | 10 | 2,040 | 20 | 2,230 | | | | | 144,440 |
| 13 | புலனாய்வு உத்தியோகத்தர் | AC-MA 5-1 - 2025 | 58,740 | 10 | 1,190 | 15 | 1,360 | 11 | 1,670 | | | 109,410 |
| 14 | ஊழல் தடுப்பு உத்தியோகத்தர் | AC-MA 5-1 - 2025 | 58,740 | 10 | 1,190 | 15 | 1,360 | 11 | 1,670 | | | 109,410 |
| 15 | நூலகர் | AC-MA 4 - 2025 | 64,320 | 10 | 1,360 | 15 | 1,670 | 5 | 2,040 | | | 113,170 |
| 16 | மொழி பெயர்ப்பாளர் மற்றும் உரைபெயர்ப்பாளர் | AC-MA 4 - 2025 | 64,320 | 10 | 1,360 | 15 | 1,670 | 5 | 2,040 | | | 113,170 |
| 17 | சட்ட உதவியாளர் | AC-MA 3 - 2025 | 53,940 | 10 | 800 | 11 | 1,190 | 10 | 1,320 | 5 | 1,350 | 94,980 |
| 18 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | AC-MA 2-1 - 2025 | 50,540 | 10 | 540 | 7 | 630 | 4 | 890 | 20 | 1,190 | 87,710 |
| 19 | உதவி நூலகர் | AC-MA 1-1 - 2025 | 46,220 | 10 | 540 | 7 | 630 | 4 | 890 | 20 | 1,190 | 83,390 |
| 20 | முகாமைத்துவ உதவியாளர் | AC-MA 1-1 - 2025 | 46,220 | 10 | 540 | 7 | 630 | 4 | 890 | 20 | 1,190 | 83,390 |
| 21 | தட்டெழுத்தாளர் மற்றும் சுருக்கெழுத்தாளர் | AC-MA 1-1 - 2025 | 46,220 | 10 | 540 | 7 | 630 | 4 | 890 | 20 | 1,190 | 83,390 |
| 22 | தொடர்பாடல் உதவியாளர் | AC-MA 1-1 - 2025 | 46,220 | 10 | 540 | 7 | 630 | 4 | 890 | 20 | 1,190 | 83,390 |
| 23 | சாரதி | AC-PL 3 - 2025 | 43,280 | 10 | 490 | 10 | 540 | 10 | 590 | 12 | 630 | 67,040 |
| 24 | அலுவலக உதவியாளர் | AC-PL 1 - 2025 | 40,500 | 10 | 450 | 10 | 490 | 7 | 540 | 15 | 590 | 62,530 |

02. முன்மொழியப்பட்ட ஊழல் எதிர்ப்பு அபாய சூழ்நிலை கொடுப்பனவு

| | பதவி | சம்பளக் குறியீடு | ஊழல் எதிர்ப்பு அபாய சூழ்நிலை கொடுப்பனவு |
|---|---|---|---|
| 1 | மேலதிக பணிப்பாளர் நாயகம் | AC-E 4 - 2025 | 140,000 |
| 2 | சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் நாயகம் | AC-E 3 - 2025 | 128,750 |
| 3 | சிரேஷ்ட பணிப்பாளர் | AC-E 3 - 2025 | 48,000 |
| 4 | பிரதிப் பணிப்பாளர் நாயகம் | AC-E 2 - 2025 | 117,500 |
| 5 | பணிப்பாளர்/ பிரதம உள்ளக கணக்காய்வாளர் | AC-E 2 - 2025 | 44,000 |
| 6 | பணிப்பாளர் (புலனாய்வு) | AC-E 2 - 2025 | 70,000 |
| 7 | சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் நாயகம் | AC-E 1-2 - 2025 | 105,250 |
| 8 | உதவிப் பணிப்பாளர் நாயகம் | AC-E 1-1 - 2025 | 94,000 |
| 9 | பிரதிப்பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் / உள்ளக கணக்காய்வாளர்/ ஆராய்ச்சி அலுவலர் | AC-E 1 - 2025 | 33,000 |
| 10 | பிரதி/உதவிப் பணிப்பாளர் (புலனாய்வு) | AC-E 1 - 2025 | 52,000 |
| 11 | நிர்வாக உத்தியோகத்தர் | AC-JM 1-2 - 2025 | 19,000 |
| 12 | போக்குவரத்து அலுவலர் | AC-JM 1-2 - 2025 | 19,000 |
| 13 | தொழில்நுட்ப அலுவலர் | AC-JM 1-2 - 2025 | 19,000 |
| 14 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அலுவலர் | AC-JM 1-2 - 2025 | 19,000 |
| 15 | சிரேஷ்ட புலனாய்வு உத்தியோகத்தர் | AC-MA 5-3 - 2025 | 31,000 |
| 16 | சிரேஷ்ட ஊழல் தடுப்பு உத்தியோகத்தர் | AC-MA 5-3 - 2025 | 20,000 |
| 17 | புலனாய்வு உத்தியோகத்தர் | AC-MA 5-1 - 2025 | 23,000 |
| 18 | ஊழல் தடுப்பு உத்தியோகத்தர் | AC-MA 5-1 - 2025 | 15,000 |
| 19 | நூலகர் | AC-MA 4 - 2025 | 16,000 |
| 20 | மொழி பெயர்ப்பாளர் மற்றும் உரைபெயர்ப்பாளர் | AC-MA 4 - 2025 | 16,000 |
| 21 | சட்ட உதவியாளர் | AC-MA 3 - 2025 | 14,000 |
| 22 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | AC-MA 2-1 - 2025 | 13,000 |
| 23 | உதவி நூலகர் | AC-MA 1-1 - 2025 | 12,000 |
| 24 | முகாமைத்துவ உதவியாளர் | AC-MA 1-1 - 2025 | 12,000 |
| 25 | தட்டெழுத்தாளர் மற்றும் சுருக்கெழுத்தாளர் | AC-MA 1-1 - 2025 | 12,000 |
| 26 | தொடர்பாடல் உதவியாளர் | AC-MA 1-1 - 2025 | 12,000 |
| 27 | சாரதி | AC-PL 3 - 2025 | 11,000 |
| 28 | அலுவலக உதவியாளர் | AC-PL 1 - 2025 | 10,000 |

03.முன்மொழியப்பட்ட செயலாற்றுகை கொடுப்பனவு

சிரேஷ்ட புலனாய்வு உத்தியோகத்தர் மற்றும் புலனாய்வு உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட அடிப்படையில் ரூபா 10,000/= வரை செயலாற்றுகை கொடுப்பனவு வழங்குதல்.

04. மேலே குறிப்பிட்ட 02 மற்றும் 03 தவிர முன்மொழியப்பட்ட பிற கொடுப்பனவுகள்

மேற்குறிப்பிட்ட ஊழல் எதிர்ப்பு அபாயசூழ்நிலை கொடுப்பனவு மற்றும் செயலாற்றுகை கொடுப்பனவுக்கு மேலதிகமாக, ஆணைக்குழுவின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு, அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் ஊழியர்களுக்கு பிற கொடுப்பனவுகளை (மேலதிக நேர கொடுப்பனவு/மேலதிக சேவை கொடுப்பனவு மற்றும் விடுமுறை தின கொடுப்பனவு, இணைந்த படிகள், வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு, தொழில்முறை கொடுப்பனவு, போக்குவரத்து கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் தகவல் தொடர்பு கொடுப்பனவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்) வழங்குவதில் பொருந்தக்கூடிய சுற்றறிக்கை விதிகள் பயன்படுத்துதல்.

(மு.ப. 11.21 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 1.00 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ எம்.கே. எம். அஸ்லம் தலைமை தாங்குவாராக" என கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.31 மணிக்கு கௌரவ எம்.கே. எம். அஸ்லம் தலைமை தாங்கினார்.)

"கௌரவ சஞ்ஜீவ ரணசிங்ஹ தலைமை தாங்குவாராக" என மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.32 மணிக்கு கௌரவ சஞ்ஜீவ ரணசிங்ஹ தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. பாராளுமன்ற அமர்வு:** பாராளுமன்றச் சபை முதல்வர் சபையின் விசேட அனுமதியுடன் பின்வருமாறு பிரேரித்தார்,— இன்றைய தினம் நடைப்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவின் பிரகாரம், சபையின் விசேட அனுமதியுடன், இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2026 மார்ச் 19 ஆம் திகதி, வியாழக்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. ஒத்திவைப்பு(அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சம்பளப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல் )**: "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

அவ்வேளை, நேரம் பி.ப. 5.30 மணிக்கு மேலாகிவிடவே, பி.ப. 5.38 மணிக்கு தலைமைத்தாங்கும் உறுப்பினர் இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க 2026 மார்ச் 19 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.